D preview_exam

# Demo Login School

## test2222

12th Standard

Date : 04-Jul-24

Reg.No. : □□□□□□

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை அளிக்கவும்

Time : 03:00:00 Hrs

Total Marks : 50

குறுவினா 2 x 2 = 4

1) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

**Answer :** அந்தி நேர்த்தில் மேற்கு வானில் கதிரவன் மறையும் எழில் காட்சி.
வியர்வை சிந்தி, கடுமையாய் உழைத்துச் சிவந்த கைகளை உடைய தொழிலாளியின் நிலை. இவற்றைப் பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார், கவிஞர் சிற்பி.

2) செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம் விளக்குக.

**Answer :** 1. மாலை நேரத்தில் மேற்குத்திசையில் சூரியன் செந்நிறமாகி மறைகிறான்.
2. இந்தச் செந்நிற ஒளியால் வானவெளி செந்நிறப்பூக்காடு போல் விளங்குகிறது எனக் கூறுகிறார், கவிஞர்

சிறுவினா 16 x 4 = 64

3) 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான், செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

**Answer :** பகலெல்லாம் வெண்ணிற ஒளி வீசி வெப்பத்தைத் தருகிறான், கதிரவன்.
மாலையில் மேற்குத்திசையில், செந்நிற ஒளி பரப்பி வானத்தைச் செம்மை ஆக்குகிறான்.
அக்காட்சி, சிவப்பு நிறத்தில் பூக்கள் பூத்த பூக்காடு போல இருப்பதாய் சிற்பி கூறுகிறார்.

4) பின்வரும் இரு பாக்களிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.
1. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.
- நன்னூல்
2. மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!
- சிற்பி பாலசுப்பிரமணியம்

**Answer :** 1. முற்கால இலக்கணங்கள் சில பிற்காலத்தில் வழக்கொழிந்துவிடும்.
(i) முன்பு இல்லாத சில, பிற்காலத்தில் இலக்கணமாவதுண்டு.
(ii) இவ்வாறு காலத்திற்கேற்ப மாறுவது குற்றமில்லை என்கிறது, நன்னூல்.
2. சங்க காலத்தில் மக்களும் மன்னரும் மானமுள்ளவராய் வாழ்ந்தனர்.
(i) பழிக்கு அஞ்சினர்; புகழை விரும்பினர்.
(ii) தன்நலம் கருதாது பொதுநலம் போற்றினர்.
(iii) சங்க காலம் இலக்கிய வரலாற்றிலும், மக்கள் வாழ்வியலிலும் பொற்காலமாய் விளங்கியது.
(iv) இத்தகைய பொற்காலம் மீண்டும் வரவேண்டும். எனவே, “பழமை நலம் புதுக்குதற்கு” என்று சிற்பி பாடுகிறார்.

5) 'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?

**Answer :** 1. பாண்டியர்கள் தமிழ்ப்புலவர்களுக்கு ஆதரவு தந்து, புதிய நூல்கள் உருவாகத் தொண்டாற்றியுள்ளனர்.
2. மூன்று தமிழ்ச்சங்கங்கள் அமைத்தனர்.
3. முதல், இடைச்சங்கநூல்கள் கடற்கோளால் அழிந்தன.
4. மூன்றாவது தமிழ்ச்சங்கம் மதுரையில் அமைந்தது.
5. அச்சங்கத்தில் 49 புலவர்கள் அமர்ந்து, நல்ல பல நூல்களை உருவாக்கினர்.
6. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் அந்த சங்கத்தில் தமிழன்னை கொலுவிருந்தாள் என்கிறார், சிற்பி.

6) 'பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்' எனச் சிற்பி புகழ்ந்து உரைப்பதேன்?

**Answer :** 1. பண்டைய புலவர்கள் வறுமையிலும் செம்மையாய் வாழ்ந்தனர்.
2. அவர்களுக்கு அக்கால வள்ளல்களான பாரி, காரி, அதியன் போன்ற மன்னர்கள், புலவர்களின் தகுதியை மதித்து வாரி வழங்கினர்.
3. இவ்வாறு புலவர்களையும், அவர்கள்மூலம் தமிழையும் காத்தமையால் 'பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்' என்கிறார், சிற்பி.

7) தமிழ்க்குயிலிடம் எவ்வாறு கூவிக்கொண்டு வா எனச் சிற்பி வேண்டுகிறார் ?

**Answer :** (i) சங்க கால மன்னரும் மக்களும் மானத்தைப் பெரிதாய்ப் போற்றினர்.
(ii) பழிக்கு அஞ்சினர்; புகழை விரும்பினர்.
(iii) தந்நலம் தவிர்த்துப் பொதுநலம் போற்றினர்.
(iv) இலக்கிய வரலாற்றிலும், மக்கள் வரலாற்றிலும் சங்ககாலம் பொற்காலமாய் விளங்கியது.
(v) இத்தகைய பொற்காலம் மீண்டும் வர வேண்டும்; அதற்குத் தமிழ்க்குயில் கூவ வேண்டும் என்கிறார், சிற்பி.

8) முத்தமிழ், மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் ஆகும் விதத்தைச் சிற்பி கூறியவாறு எழுதுக.

**Answer :** (i) "உள்ளத்துள் உள்ளது கவிதை" என்றார், கவிமணி.
(ii) கவிஞன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கவிதையாய் எழுதுகிறான்.
(iii) கவிதைக்குத் துணை நிற்க உதவுவது சொல், பொருள் நயமிக்க தமிழ்மொழியாகும்.
(iv) அதனால் சிற்பி, உள்ளத்திலிருந்து வரும் கவிதைக்கு உணவாய் அமைவது முத்தமிழ் என்கிறார்.

9) தமிழ்மொழியின் சிறப்புகளாக நீ அறிந்தன யாவை?

**Answer :** நம் அடையாளமாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும், தோன்றிய காலம்முதல் மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும், உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது தமிழ்மொழி. எத்திசையிலும் புகழோடு இலங்கும் தமிழ்மொழியின் பெருமையைப் புகழ்ந்து பாடாத மரபுக் கவிஞர்கள் இலர்.

10) தமிழ்க் கவிஞர்களின் அவா யாது?

**Answer :** தமிழின் பெருமை பேசாத மரபுக் கவிஞர் இலர். பல புதிய உள்ளடக்கங்களால் தமிழ் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு, பழஞ்சிறப்பையும் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பது, தமிழ்க் கவிஞர்களின் அவா ஆகும்.

11) .தொழிலாளர் எவ்வாறு உழைக்கின்றனர்?

**Answer :** சூரியன் மலைமுகட்டில் தலைசாய்க்கும் அந்திவேளையில் வானில் பரவும் செவ்வொளிபோல் கைகள் சிவக்குமாறும், உடல் நோக உழைக்கும் தோள்களின்மேல் வியர்வைவெள்ளம் முத்துமுத்தாக வீற்றிருக்கவும் தொழிலாளர் கடுமையாக உழைக்கின்றனர்.

12) கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழைக் கூவி அழைப்பது ஏன்?

**Answer :** 1. எதையும் வியந்து பாடும் ஆற்றல் தமிழுக்கு உண்டு.
2. எதையும் பாட வேண்டும் என்கிற கவிதை வெறிக்கு உணவாக அமுதத்தமிழே அமையும்.
3. அது பாண்டியரின் சங்கத்தில் கொலு வீற்றிருந்தது.
4. தமிழகத்தில் பாரி முதலான வள்ளல்கள் எழுவரை ஈன்றளித்தது.
5. இவ்வகையில், தமிழ்ச்சமூகத்தில் பழமைநலத்தைப் புதுக்குவதற்கும் தமிழர்களை மெய்சிலிர்க்க வைத்துப் புத்தெழுச்சி பெறவைப்பதற்கும் தமிழ்க்குயில் கூவவேண்டும்.
6. அதற்குத் தடையாகச் சிறை இடப்பட்டிருந்தால், சிங்கம்போல் சிலிர்த்தெழுந்து கூண்டை உடைத்துக் கொண்டு வெளிவர வேண்டும் எனக் கவிஞர் கருதியதால், தமிழைக் கூவி அழைக்கிறார்.

13) கவிதைப்பேழை - இளந்தமிழே! சிற்பி பாலசுப்பிரமணியம் குறித்துக் குறிப்பெழுதுக.

**Answer :** 1. பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர், கவிஞர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம். பாரதியார் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்தவர்.
2. நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி முதலிய கவிதை நூல்கள் பல இயற்றியவர். இலக்கியச் சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும் என்னும் உரைநடை நூல்களையும் எழுதியவர்.
3. மலையாளக் கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்தவர். மொழிப்பெயர்ப்புக்காக ஒருமுறையும், 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலுக்கு ஒருமுறையும் சாகித்திய அகாதமி விருது பெற்றவர். இவர் நூல்கள், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

14) உன்னையல்லால் ஏற்ற துணை வேறுண்டோ ?
இயம்பிடாயே செந்தமிழே! என்று கவிஞர் சிற்பி ஏன் கூறுகிறார் ?

**Answer :** **ஏற்ற துணை செந்தமிழே ! :**

**செந்நிறப்பூக்காடு:**

(i) மேற்கு மலையில் சூரியன் மறைந்ததால் அதன் செந்நிறக்கதிர்கள் வானமெல்லாம் பரவி, மேகங்கள் யாவும் செந்நிறமானது.
(ii) அதனால், செந்நிறப்பூக்கள் நிறைந்த காடாக வானம் காட்சியளித்தது.

**வியர்வை வெள்ளம் :**

(i) செந்நிற வானத்தைப் போன்ற சிவந்த கைகளை உடைய, நாள்தோறும் தன் உடல் வருத்தி உழைக்கும் தொழிலாளரின் தோள் மீது காணப்படும் வெள்ளம் போன்ற உழைப்பின் வியர்வையை வியந்து பாட வேண்டும்.

**தமிழின் துணை வேண்டும் :**

(i) உழைப்பின் உயர்வைப் போற்றிப் பாட, உள்ளத்து உணர்வை எடுத்துக் கூற செந்தமிழே! உன்னையல்லால் ஏற்ற துணை வேறில்லை என்கிறார் கவிஞர் சிற்பி.

15) முன்னம் ஒரு நாள் தமிழ்மொழி எவ்வாறு பழமை நலம் பெற்றிருந்ததாகக் கவிஞர் சிற்பி பாடுகிறார் ?

**Answer :** **பாண்டியரின் சங்கத்தில் கொலு :**

(i) முற்காலத்தில் முதல், இடைச்சங்கங்கள் கடல்கோளால் அழிந்த போதிலும், மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டியரின் அவை முன்னிலையில் தமிழன்னை கொலுவாக வீற்றிருந்தாள்.
(ii) அப்போது, பாண்டிய நாடெங்கும் தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளம் பெற்றுத் தழைத்தோங்கியது.

**கடையெழு வள்ளல்கள் :**

(i) தமிழன்னை ஈன்று தந்த பாரி முதலான கடையெழு வள்ளல்கள், தமிழ்ப்புலவர்களைப் பெரிதும் ஆதரித்தனர்.
(ii) எனவே தான் கடையெழு வள்ளல்களின் கொடை, வீரம், கல்வி, புகழ் போன்ற தன்மைகளைப் போற்றிப் பாடிய சங்கப்பாடல்கள் நிறைவாகக் காணப்படுகின்றன.
(iii) இவ்வாறு கடையெழு வள்ளல்களின் காலத்தில், தமிழ் நாடெங்கும் தமிழ்மொழி ஆட்சி செலுத்தியிருந்தது.

**பழமை நலம் :**

இத்தகைய தொன்மையும் அழியாத்தன்மையும் தனிச்சிறப்புகளுமான பழமை நலம் பெற்றிருந்ததாகக் கவிஞர் சிற்பி தமிழன்னையைப் போற்றிப் பாடுகிறார்.

16) தமிழன்னை தம் பழமைநலம் புதுக்குதற்கு எவ்வாறெல்லாம் வரவேண்டும் என்று கவிஞர் சிற்பி அழைக்கிறார் ?

**Answer :** **பழமை நலம்**

(i) தமிழ்ச்சங்கங்கள் அமைத்து, பாண்டியர்கள் தமிழை வளர்த்தனர்.
(ii) பாரி முதலான கடையெழு வள்ளல்கள் காலத்தில் தமிழ்நாடெங்கும் தமிழ்மொழி பரவியிருந்தது.

**தமிழ்க்குயிலே ! கூவி வா !**

இத்தகைய பழமைநலமிக்க தமிழ்மொழி காலத்திற்கேற்ப புதிய புதிய இலக்கியங்களைப் பெற்று, மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு மறுபடியும் ஒரு வசந்த காலம் தோன்றிட தமிழ்க்குயிலாகக் கூவி வா என்று அழைக்கிறார் கவிஞர்.

**சிங்கம் போலச் சீறி வா !**

(i) மக்களிடம் காணப்பட்ட பிறமொழிக்கலப்பு மற்றும் ஆர்வமின்மையால் கூண்டுக்குள் அடைப்பட்டிருந்தது தமிழ்மொழி.
(ii) அதைத் தமது புதுப்புது இலக்கிய வளர்ச்சிகள் மூலம் உடைத்தெறிந்து விட்டு, குளிர்ந்த தென்றல் வீசும் பொதிகை மலையில் தோன்றிய தென்தமிழானது சிங்கம் போல விரைவாகப் பாய்ந்து வா என்று அழைக்கிறார் கவிஞர்.

17) குளிர் பொதிகைத் தென்தமிழ் ஏன் சீறி வர வேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார் ?

**Answer :** (i) உள்ளத்தில் பொங்கிவரும் உணர்வுகளை உணர்ச்சி மிகு கவிதையாக எழுத முத்தமிழே உதவி செய்கின்றது.
(ii) பாண்டியமன்னர்கள் அமைத்த சங்கத்திலே, தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சிச் செய்தது.
(iii) பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்தது.
(iv) அன்றிருந்த தமிழர் நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் பிறப்பதற்கு நீ குயில் போலக் கூவி வர வேண்டும்.
(v) இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் அகன்றிட அவர்கள் சிறைப்பட்டிருக்கும் கூட்டினை உடைத்திட நீயும் சிங்கம் போலச் சீறி புறப்பட்டு வர வேண்டும்.

18) கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிக் குறிப்பு வரைக.

**Answer :** **பெயர்** : பாலசுப்பிரமணியம்.

**சிறப்புப் பெயர்** : சிற்பி (எழுத்துகளைச் செதுக்குவதால் சிற்பி எனப்பட்டார்).

**பெற்றோர்** : சி. பொன்னுசாமி - கண்டியம்மாள்.

**ஊர்** : ஆத்துப்பொள்ளாச்சி, கோவை.

**பணி** : பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.
சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர்.
**விருது** : "ஒரு கிராமத்து நதி" எனும் கவிதை நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது.

**படைப்புகள்** : ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி.

நெடுவினா 2 x 6 = 12

19) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

**Answer :** **பொன்னிறப் பூக்காடோ! :** மேற்கில், மாலையில் மறையும் கதிரவன் செந்நிற ஒளியால் வானத்தைச் செந்நிறமாக்கியது. அது செந்நிறப் பூக்கள் பூத்த பூக்காடு போல் விளங்குகிறது.
**வருந்தி உழைக்கும் பாட்டாளி ! :** வருந்தி உழைப்பதால் தொழிலாளர்களின் கரங்களில் சிவப்பேறியுள்ளது; தோள்களில் முத்துமுத்தாய் வியர்வை தோன்றுகின்றது.
**கவி பாட நீயே துணை ! :** அந்திவானத்தின் செந்நிறக்காட்சி, உழைப்பாளர்களின் உழைப்பு ஆகியவற்றைப் பாடக் கிடைத்த செந்தமிழே எனக்குத் துணை.
**சங்கத்தில் வீற்றிருந்த தமிழரசி ! :** உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் தமிழ், பல நூல்கள் உருவாகக் காரணமாய் இருந்தது. சிறப்புமிக்க தமிழ், பாண்டியர் அமைத்த முச்சங்கங்களில் அரசியாய் கொலுவிருந்தது.
**அந்த நாளும் வந்திடாதோ ! :** மொழியைப் போற்றி வளர்த்த புலவர்களும், அவர்களுக்கு ஆதரவளித்த பாரி போன்ற வள்ளல்களும் வாழ்ந்தனர். அத்தகைய சிறப்புகள் மீண்டும் வரத் தமிழ்க்குயிலே கூவிடு.
**சிங்கமே, தடைகளைத் தகர்த்திடு ! :** சிங்கம் தன்னை அடைத்து வைத்திருக்கும் கூண்டினை உடைத்து வெளியேறும். அதுபோல், பொதிகை மலையில் தோன்றிய தமிழே, உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவற்றைத் தகர்த்திடு.

20) 'இளந்தமிழே' என்னும் கவிதையில் சிற்பி கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**Answer :** **பொன்னிறப் பூக்காடு :** மேற்கில் மாலையில் மறையும் கதிரவன் செந்நிற ஒளியால் வானத்தைச் செந்நிறமாக்கியது. அது செந்நிறப் பூக்கள் பூத்த பூக்காடு போல் விளங்குகிறது.
**வருந்தி உழைக்கும் பாட்டாளி :** வருந்தி உழைப்பதால் தொழிலாளர்களின் கரங்கள் சிவப்பேறியுள்ளன; தோள்களில் முத்துமுத்தாக வியர்வை தோன்றுகின்றது.
**கவி பாட நீயே துணை :** அந்திவானத்தின் செந்நிறக் காட்சி, உழைப்பாளர்களின் உழைப்பு ஆகியவற்றைப் பாடக் கிடைத்த செந்தமிழே எனக்குத் துணை.
**சங்கத்தில் வீற்றிருந்த தமிழரசி :** உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் தமிழ், பல நூல்கள் உருவாகக் காரணமாக இருந்தது. சிறப்புமிக்க தமிழன்னை பாண்டியர் அமைத்த முச்சங்கங்களில் அரசியாய் கொலுவிருந்தாள்.
**அந்த நாளும் வந்திடாதோ! :** மொழியைப் போற்றி வளர்த்த புலவர்களும் அவர்களுக்கு ஆதரவளித்த பாரி உள்ளிட்ட வள்ளல்களும் அன்று வாழ்ந்தனர். அத்தகைய சிறப்புகள் மீண்டும் வரத் தமிழ்க்குயிலே கூவிடு.
**சிங்கமே, தடைகளைத் தகர்த்திடு :** சிங்கம் தன்னை அடைத்து வைத்திருக்கும் கூண்டினை உடைத்து வெளியேறும். அதுபோல் பொதிகைமலையில் தோன்றிய தமிழே, உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவற்றைத் தகர்த்திடு.